செய்வதற்கு எளிமையாக இருக்கும்." பல இடங்களிலே வசூலிக்காமல் இருக்கின்ற தொகையை வசூலிக்க வேண்டுமென்று வருவாய்த் துறை அவர்களுக்குத் தாக்கீது அனுப்பியிருக்கிறது.

Obscene books in Madras City.

* 463. Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether a number of persons have been arrested in connection with the exhibition of obscene pictures and books in Madras City about the 9th June 1970; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) (1) 8—6—1970 அன்று மூர் அங்காடியில் உள்ள மூன்று கடைகள் காவலர்களால் திடீர் சோதனையிடப்பட்டு ஆபாச நூல்கள் கைப்பற்றப்பட்டன. இ.பி.கோ. 292-வது பிரிவின் கீழ் கடைச் சொந்தக்காரர்கள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. குற்றம் சாட்டப்பட்டவர்கள் குறித்து 9-வது மாநகர மாஜிஸ்திரேட் நீதி மன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. அவர் அவர்களைக் குற்றமிழைத்ததாகத் தீர்ப்பளித்து ஒவ்வொருவரும் 150 ரூபாய் அபராதத் தொகை செலுத்துமாறு கட்டளையிடப்பட்டது.

(2) 11—6—1970 அன்று, நேத்தாஜி சுபாஷ் சந்திர போஸ் சாலையில் 'மைபோட்டோ ஸ்டுடியோ' திடீர்ச் சோதனையிடப்பட்டு, ஆபாசமான புகைப்படங்கள் கைப்பற்றப்பட்டன. இது தொடர்பாக மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். குற்றம் சாட்டப்பட்டவர்களில் இருவர் குறித்து சென்னை, ஜார்ஜ்டவுன் 4-வது மாநகர மாஜிஸ்திரேட் நீதி மன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. அவர்களை குற்றவாளிகள் என மாஜிஸ்திரேட் தீர்மானித்து அவர்கள் ஒவ்வொருவரும் 50 ரூபாய் அபராதத் தொகை செலுத்துமாறு தீர்ப்பளித்தார்.

THIRU R. PONNAPPA NADAR : Sir, may I know from the Hon. Chief Minister whether this Government would take steps to prevent obscene and sexy cinema posters being displayed in certain areas of Mount Road in the city?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: சென்னையிலே இப்படி ஒட்டப்படுகின்ற அந்தச் சுவரொட்டிகளைத் தடுப்பதற்கும் காவல்துறை மூலமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆபாசச் சுவரொட்டிகள், படங்கள் மாத்திரமல்ல—பத்திரிகைகளில் கூட—புனிதத்தைப் போதிக்கின்ற பல பத்திரிகைகளில் கூட—அப்படிப்பட்ட படங்கள் வெளி வருகின்றன, அவற்றையும் கண்காணிக்கின்ற பொறுப்பு அரசுக்கு ஏற்படும் என்று கருதுகிறேன்.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, ஆபாசம் என்பது அவரவர்கள், பார்ப்பவர்களுடைய மனப்பான்மையைப் பொறுத்தது. போஸ்ட்டர்களில் பெண்களுக்கு மேலாடை இல்லாமலிருந்தால் அதை ஆபாசம் என்று சில

பேர் கருதுகிறார்கள், சில பேர்கள் அதை ஆபாசமாகக் கருதுவதில்லை. எனவே ஆபாசம் என்பதற்கு அதிகாரிகளுக்கு எந்தவிதத்திலே நம்முடைய அரசு கொள்கை வகுத்துக் கொடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: சிலபேர்கள் ஆபாசம் என்று சொல்கிறார்கள்; சில பேர்கள் ஆபாசம்! என்று சொல்கிறார்கள் (சிரிப்பு).

திரு. எம். தேவராசன்: தலைவர் அவர்களே, சில பெரிய மாளிகைகளில் பணக்காரர்களுக்கு 50 ரூபாய் 60 ரூபாய் என்று கட்டணம் வசூலித்துக் கொண்டு ஆபாசமான திரைப் படங்கள் போட்டுக் காட்டுவதாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மையா? அதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஓரளவுக்கு உண்மைதான். அது குறித்து 26—5—1970 அன்றுகூட போலீஸாருக்கு ஒரு தகவல் கிடைத்து தம்பு செட்டித் தெருவில் அப்படியொரு உடலுறவு ஆபாசப்படம் காட்டுவதற்கு 10 ரூபாய், 20 ரூபாய் என்று கட்டணம் வசூலிப்பதாகத் தெரிந்து அதிலே சம்பந்தப்பட்டவர் கைது செய்யப்பட்டு வழக்குத் தொடரப்பட்டு அந்த வழக்கு விசாரணையில் இருக்கிறது.

திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, கூளப்பநாயக்கன் காதல், விரலிவிடு தூது போன்ற இலக்கியங்களும் ஆபாசம் என்ற பெயரால் தடை செய்யப்பட்டுள்ளனவா? அவை இன்றைக்கு கிடைக்கவில்லையே காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அவைகள் தடை செய்யப்பட்டுள்ளனவா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அதுவும் அளவுக்கு மீறி இருக்குமானால் தடைசெய்யப்பட வேண்டியதுதான்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவர் அவர்களே, உடலுறவு பற்றிய ஆபாசமான படம் போட்டுக் காட்டுவதற்கு அண்மையிலே நம்முடைய மாநகராட்சியைச் சேர்ந்த புரஜக்டர் பயன்படுத்தப்பட்டதா? அதைப்பற்றிய குறிப்பு ஏதாவது அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இதிலே கைது செய்யப்பட்டவர் சென்னை மாநகராட்சியிலே திரைப் படம் காட்டுபவர் என்ற தகவல் மட்டும் அரசுக்குக் கிடைத்திருக்கிறது.

திரு. முனு ஆதி: தலைவர் அவர்களே, சுவரொட்டிகளில் மட்டும் அல்லாது கலை என்ற பெயரால் கல்வெட்டுக்களிலே ஆபாசம் உள்ள படங்கள் இருப்பதையும் தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தங்களுடைய கேள்வியிலேயே கலை என்ற பெயரால் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

மக்கள் சபையில் தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட இடங்கள்

* 464 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

குடும்பக் கட்டுப்பாடு திட்டம் தீவிரமாக அமல் நடத்தப்படுவதால், நாடாளுமன்றத்தில், தமிழ்நாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கை குறைவதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?